Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41 கதிர் : 37 | வெள்ளிக்கிழமை 02 ஜனவரி 2026 | மார்கழி 18 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2056 | பக்கங்கள் – 12 விலை – ரூபா 50



## ஜோன்ஸ்டனுக்கு பயணத்தடை!

கொழும்பு, ஜன. 2

பொலிஸாரால் தேடப்பட்டு வரும் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு எதிராக வத்தளை நீதவான் நீதிமன் »11

திஸ்ஸ விகாரைக்கு முன்பாக

# சட்டவிரோதக் கட்டம் என்ற அறிவிப்புப் பலகைக்குத் தடை

மத நல்லிணக்கத்தை பாதிக்குமாம் பலாலிப் பொலிஸார் எச்சரிக்கை

**யாழ்ப்பாணம், ஜனவரி 2**

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தீர்மானத்துக்கு அமைய, தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு முன்பாக 'சட்டவிரோதக் கட்டடம்' என்று அறிவித்தல் பலகை நட்டால், சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று, பிரதேசசபையின் செயலருக்கு பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் எழுத்து மூலம் அறிவுறுத்தப் பட்டுள்ளது. »11

காணாமற்போன

## மகனைத் தேடிய தாய் துயரச்சாவு

யாழ்ப்பாணம், ஜன. 2

காணாமற்போன தனது மகனைத் தேடியலைந்த தாயொருவர், சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம்-ஆனைக் கோட்டைப் பகுதியைச் சேர்ந்த றெஜினா »11

## திஸ்ஸ விகாரைக்கு எதிராக நாளை பெரும் போராட்டம்!

மக்களை அணிதிரள அழைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 2

தையிட்டி திஸ்ஸ விகாரையை உடனடியாக அகற்றுமாறு கோரியும், திஸ்ஸ விகாரைக்கு எதிராகப் போராடிய நபர்கள் மீது பொலிஸாரால் நடத்தப்பட்ட பலப்பிரயோகத்தைக் கண்டித்தும் நாளை போராட்டம் இடம்பெறவுள்ளது. திஸ்ஸ விகாரையின் முன்றலில் காலை 8 மணி தொடக்கம் இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ள »11

போரை வெற்றிபெற உதவிய

## டக்ளஸைச் சிறையிட்டமை எமக்குப் பெரும் கவலையே!

மஹிந்தவின் கட்சி தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 2

30 வருடகால போரை முடிவுக்கு கொண்டுவந்த பிள்ளையான், டக்ளஸ் ஆகியோர் சிறைகளுக்குள் வாடுகின்றமை கவலையளிக்கின்றது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது. பிள்ளையான், டக்ளஸ் இருவரும் ஜனாதிபதி »11

விகாரைக்கு எதிராகப் போராடிய

## பிரதேசசபை உறுப்பினர்களுக்கு நீதிமன்றம் அழைப்புக் கட்டளை!

யாழ்ப்பாணம், ஜன. 2

தையிட்டி விகாராதிபதியின் பதவி உயர்வுக்கு எதிராகவும், திஸ்ஸ விகாரையை அகற்றுமாறும் வலியுறுத்திப் போராட்டத்தில் ஈடுபட்ட வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 11 உறுப்பினர்களுக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தால் அழைப்பு கட்டளை அனுப் »11

## சஜித்தை அழைத்து ரணில் வாழ்த்து!

விரைவில் கூட்டிணைவு?

கொழும்பு, ஜன. 2

புத்தாண்டை முன்னிட்டு, முன்னாள் ஜனாதிபதி ரணில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தை தொலைபேசியில் தொடர்புகொண்டு வாழ்த்துத் தெரிவித்துள்ளார். கடந்தகால கசப்புணர்வு »11



## பிரதேசசபை உறுப்பினரின் கணவர் கத்தியால் குத்திப் படுகொலை!

மருதங்கேணியில் பயங்கரம்



யாழ்ப்பாணம், ஜன. 2

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற கத்திக்குத்துத் தாக்குதலில் குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்தார். பருத்தித்துறை பிரதேசசபை உறுப்பினர் ஜெனிற்றாவின் கணவரான தவநேசன் (வயது-40) »11

## கத்திக்குத்து; பெண் கைது! யாழில் சம்பவம்

விரிவு பக்கம்:-03

## மாகாணசபைத் தேர்தலை துணிவிருந்தால் நடத்துக!

அரசுக்கு எதிர்க்கட்சிகள் சவால்

கொழும்பு, ஜன. 2

அரசாங்கத்துக்குத் துணிவிருந்தால், மாகாணத் தேர்தலை நடத்துவதற்கு முன்வர வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சிகள் அனைத்தும் கூட்டாக வலியுறுத்தியுள்ளன. புதுவருடத்தை முன்னிட்டு, »11



"ஆரெல்லாம் எங்களை அழிக்க உதவினவை எண்டதை அவையளே காட்டிக்குடுக்கினம் கண்டியளோ"

முச்சந்தி முரளி

டித்வா பாதிப்பு தணியும்வரை

## பாடசாலைகளின் நேரத்தை நீடிக்காதிருக்கத் தீர்மானம்!

கொழும்பு, ஜன. 2

டித்வா புயலால் ஏற்பட்ட இடர் நிலைமை மற்றும் சில மாகாணங்களில் பாடசாலைக் கட்டமைப்புக்கும் போக்குவரத்துக் கட்டமைப்புக்கும் ஏற்பட்டுள்ள சேதங்களைக் கருத்திற்கொண்டு பாடசாலைகளின் நேரத்தை அதிகரிக்காமல் இருக்கத் தீர்மானிக்கப் »11

## எரிவாயு விலையுயர்வு!

கொழும்பு, ஜன. 2

நேற்று நள்ளிரவுமுதல் அமுலாகும் வகையில் எரிவாயு விலையை அதிகரித்துள்ளதாக லாப்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி, 12.5 கிலோகிராம் எடையுடைய எரிவாயுவின் விலை 150 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, புதிய விலையாக 4 ஆயிரத்து 250 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 01.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4303 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கங்கள் | 22 33 39 62 |
| விசேட எழுத்து | R |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 01.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1370 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 13 15 34 50 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 01.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0329 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 3 5 1 2 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 01.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2409 |
| ஆங்கில எழுத்து | U |
| சுப்பர் இலக்கம் | 21 |
| வெற்றி இலக்கங்கள் | 18 23 31 76 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 01.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6061 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 4 7 4 5 0 0 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 01.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2091 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 16 20 37 42 |
| விசேட எழுத்து | Q |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 01.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0177 |
| வெற்றி இலக்கினம் | கன்னி |
| வெற்றி இலக்கங்கள் | 27 39 46 |

## அடிப்படை ஆதாரமற்ற மகாவம்சத்தை நம்பி

# தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமிப்பது நியாயமல்ல!

### காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் தெரிவிப்பு

**வவுனியா, ஜன.2**

**மகாவம்சத்தை அடிப்படையாகக்கொண்டு முன்னெடுக்கப்படும் நிலஉரிமை கோரல்களும்,தமிழர்பகுதிகளில்பௌத்தசின்னங்கள்திணிக்கப்படுவதும் எவ்வித வரலாற்று அடிப்படையுமற்றவை என்று தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் தெரிவித்துள்ளது. புத்தாண்டு தினமான நேற்று வவுனியாவில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் பின்னர் ஊடகங்க ளுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.**

அவர்கள் மேலும் தெரிவிக் கையில்,

வவுனியாவில் 3,237 நாள்க ளைக் கடந்து தொடர்ச்சியாக சுழற்சிமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் இந்தத் தாய்மார் கள், தமது பிள்ளைகளுக்கான நீதிவேண்டி சர்வதேசத்திடம் இறைஞ்சுகின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளை கள் தொடர்பான உண்மையை வெளிக்கொணரவும், தமிழ் மக் களுக்கு எதிராகத் தொடரும் இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்தி இறைமையை மீட்டெ டுக்கவும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் முன்வர வேண்டும். இந்தத் தீவில் தமிழர் களின் இருப்பு, பிற்கால அனைத்து அரசியல் மற்றும் இனக்கட்டுமானங்களுக்கும் முந்தையது. தென்னிந்தியா விலோ அல்லது இலங்கைத் தீவிலோ பண்டைய காலத்தில் சிங்கள இனம் இருந்ததற்கான தொல்பொருள் சான்றுகள் இல்லை. தமிழ் மக்கள் சைவ சமயத்தையும், பின்னர் தமிழ் பௌத்தத்தையும் பின்பற்றி மீண்டும் சைவத்துக்கே திரும் பிய வரலாற்றை மணி மேகலை போன்ற இலக்கியங் கள் உறுதிப்படுத்துகின்றன.

எனவே, மகாவம்சத்தைக் காட்டி வடக்கு-கிழக்கில் முன்னெடுக்கப் படும் ஆக்கிரமிப்புகள் வர லாற்று ரீதியாக செல்லுபடியற் றன. வடக்கு - கிழக்கு என்பது அதன் வரலாறு, கலாசாரம் மற் றும் தொடர்ச்சியான வாழ்விட அடிப்படையில் தமிழ்த் தேசத் திற்கே சொந்தமானது.

அத்துடன் கடந்த மாதம் அமெ ரிக்க இராணுவ விமானங்கள் யாழ்ப்பாணத்தில் தரையிறங்கி மனிதாபிமான உதவிகளை வழங்கியபோது, எந்தவொரு தமிழ் அரசியற்கட்சியோ அல் லது சிவில் அமைப்போ அதனை அங்கீகரிக்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோரின் தாய்மார்களாகிய நாங்கள் மட் டுமே அதற்கு நன்றி தெரிவித் தோம். இது தமிழர் தரப்பில் உள்ள தார்மீக மற்றும் தலை மைத்துவத் தோல்வியையே காட்டுகிறது. -என்றனர். (ச-110)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 01.01.2026 | வியாழக்கிழமை | 0769 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| X | 2 6 2 4 2 2 | |

| Super Ball | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 01.01.2026 | வியாழக்கிழமை | | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| 3035 | E | 21 22 30 54 | |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 01.01.2026 | வியாழக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| S | 08 44 45 75 | 5196 |

| SASIRI | |
|---|---|
| திகதி | தினம் |
| 01.01.2026 | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0865 | 15 21 33 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 01.01.2026 | வியாழக்கிழமை | |
| விருச்சிகம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 02 21 54 57 | 4747 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 01.01.2026 | வியாழக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| X | 32 | 01 31 50 52 | 2211 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 01.01.2026 | வியாழக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Y | 20 23 43 60 | 2861 |



## கூட்டுறவு அமைச்சின் யாழ். அலுவலகம் திறப்பு

யாழ்ப்பாணம்,ஜன.2

வடக்கு மாகாண மகளிர் விவகாரம், புனர் வாழ்வளித்தல், சமூகசேவைகள், கூட்டுறவு அமைச்சின் புதிய அலுவலகம் பிரதான வீதி, அடப்பன் வீதி யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள தொழிற்றுறைத் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது.

அமைச்சின் செயலாளர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கடற் றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், நாடாளு மன்ற உறுப்பினர் இளங்குமரன், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் தனுஜா முருகே சன் உட்பட திணைக்களத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பொம்மலாட்டம், தேசிய ரீதியில் விளையாட்டுகளில் சாதனை படைத்தவர் களுக்கான கௌரவிப்பு உள்ளிட்ட நிகழ்வு கள் இடம்பெற்றன. (க-17)

## வடக்கு மாகாணசபையில் சத்தியப்பிரமாண நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.2

வடக்கு மாகாணசபையில், புதிய வருடக் கடமை களை ஆரம்பிக்கும் நிகழ்வு சபை வளாகத்தில் நேற்று இடம்பெற்றது. வடக்கு மாகாணசபையின் பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன் தேசியக்கொடியையும், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அ.சோதிநாதன் வடமாகாணக் கொடி யையும் ஏற்றியதைத் தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த அனைவரை யும் நினைவுகூரும் முகமாக இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது. தொடர்ந்து அரச சேவை சத்தியப்பிரமாணத்தைப் பிரதிப் பிர தம செயலாளர் செ.பிரணவநாதன் வாசிக்க, உத் தியோகத்தர்கள் அனைவரும் உறுதிமொழி எடுத் துக்கொண்டனர். பிரதம செயலாளர் சிறப்புரை ஆற்றினார். (க-9)

## கட்டுநாயக்கவில் ஒருவர் போதைப்பொருளுடன் கைது

கொழும்பு, ஜன.2

கட்டுநாயக்கவில் ஐஸ் மற்றும் ஹெரோய்ன் போதைப்பொ ருள்களுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்றுமுன்தினம் புதன் கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரிடமிருந்து 342 கிராம் 70 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 152 கிராம் 180 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள் ளன. சந்தேகநபர் மினுவங்கொடைப் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசமைப்பு உருவாக்க ஆரம்பப் பணிகள் இம்மாதம்

## நீதி அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.2**

**புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான ஆரம்பகட்டப் பணிகள் இந்த மாதம் நடைபெறும். நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்குப் புதிய அரசமைப்பின் ஊடாகத் தீர்வு முன்வைக்கப்படும் என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுத்த பணிகளை நிறைவுசெய்து நாட்டுக்குப் பொருந்தும்வகையில் புதிய அரசமைப்பை உருவாக்குவதாக நாட்டு மக்களுக்கு வாக்குறுதியளித்தோம். அதேபோல் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச்செய்வதாகவும் குறிப்பிட்டோம். பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவது தொடர்பாக ஆராய்ந்து விதப்புரைகளை முன்வைப்பதற்காக ஜனாதிபதி சட்டத்தரணி ஹர்ச குலரத்ன தலைமையில் விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டது. கடந்த அரசாங்கம் தயாரித்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய அறிவுறுத்தல்கள், தேசிய மற்றும் சர்வதேசமட்டத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு புதிய சட்டவரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான ஆரம்பகட்டப் பணிகளை இம்மாதம் மேற்கொள்ளவுள்ளோம். காலம் காலமாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை விடுத்து பொதுக் கொள்கைக்கு அமைய சிறந்த பரிந்துரைகளை முன்வைக்கவேண்டும் என்று எதிர்க்கட்சிகளிடம் கோருகின்றோம்-என்றார். (எ-இ)



# ஈழத்தமிழருக்கு 'சேர்' பட்டம் பிரிட்டன் அரசு கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.2

யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட பிரித்தானியா வாழ் ஈழத்தமிழருக்கு பிரித்தானிய அரசு 'சேர்' பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

பிரித்தானியாவின் உயர்கல்விக்கு மதிப்பிட முடியாத பெரும் பங்களிப்பை ஆற்றியமைக்காக இந்த உயரிய கௌரவம் வழங்கப்பட்டுள்ளது. பிரித்தானியாவில் 'சேர்' பட்டம் அரசின் அதி உயர்விருதாகக் கருதப்படுகின்றது. இது ஒரு துறையில் சிறப்பாகப் பணிபுரிந்தவர்களுக்கு மட்டுமே பிரதமரால் சிபாரிசு செய்யப்பட்டு வழங்கப்படுகின்றது.

இந்த விருதைப் பெறுபவர்கள் பிரித்தானியாவில் மக்களுக்கும் மற்றும் சமுதாயத்துக்கு அரும்பெரும் சேவையாற்றி பிரித்தானியாவுக்கு சிறப்புச் சேர்ப்பவர்கள் எனக் கூறப்படுகின்றது. இந்த வகையிலேயே இங்கிலாந்தின் லெஸ்டர் பல்கலைக்கழகத்தின் தலைவரும் துணைவேந்தருமான பேராசிரியர் நிஷான் கனகராஜா 2026ஆம் ஆண்டு பிரித்தானிய அரசரின் புத்தாண்டு கௌரவத்தில் 'சேர்' பட்டம் பெற்றுள்ளார். பேராசிரியர் நிசான் கனகராஜா யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைக் கற்றார். பின்னர் இங்கிலாந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பை முடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-100)

# கத்திக்குத்து; பெண் கைது!

## யாழில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜன.2

அயல்வீட்டுக்காரருடன் தகராறில் ஈடுபட்டு அவரைக் கத்தியால் குத்திய குற்றச்சாட்டில் பெண்ணொருவர் சுன்னாகம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புன்னாலைக்கட்டுவன் தெற்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் கத்திக்குத்துக்கு இலக்காகிய நபர் படுகாயமடைந்தநிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-27)

# கல்வி அமைச்சின் மீது சி.ஐ.டியில் முறைப்பாடு

கொழும்பு, ஜன.2

கல்வி அமைச்சுக்கு எதிராக சுதந்திர வழக்கறிஞர் சங்கம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளது.

தரம் 6 மாணவர்களின் ஆங்கில செயன்முறைப் புத்தகத்தில் பொருத்தமற்ற இணையத்தளம் ஒன்றின் பெயர் இருந்தமை தொடர்பாகவே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனுடன் தொடர்புடையவர்களைக் கண்டறிந்து தண்டனை வழங்க வேண்டும் என்று சுதந்திர வழக்கறிஞர்கள் சங்கத்தின் தலைவர் மைத்திரி குணரத்தின மற்றும் அதன் செயலாளர் அதுல டி சில்வா ஆகியோர் கூட்டாக இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளனர். (எ-இ)




# செத்த கிளிக்குச் சிங்காரம் கேக்குது!

எல்லா விசயங்களிலையும் யாழ்ப்பாணத்தாருக்கு ஒரு தனித்துவம் இருக்கத்தான் செய்யுது. பொதுவா எல்லா நாடுகளிலையும் புதுவருசம் இரவு 12 மணிக்குத் தானே பிறக்கும். ஆனால் யாழ்ப்பாணத்தில மட்டும் 7.45க்குத்தான் இந்தமுறை புதுவருசம் பிறந்திருக்குது. சித்திரை வருசப்பிறப்பெண்டால்கூட வாக்கிய பஞ்சாங்கம், திருக்கணித பஞ்சாங்கம் ரண்டிலையும் கணிப்புகள் மாறுறதால இப்பிடி ஏதும் நாள் வித்தியாசம், நேர வைத்தியாசம் வருமெண்டு சொல்லலாம். ஆனால் கிறின்விச் கோட்டின்படி கணிக்கிற நேரத்தில மாற்றம் வராது தானே. எண்டாலும் கிறின்விச் கோட்டு நேரக் கணிப்புக்கே சவால் விடக்கூடிய ஆக்கள் நாங்கள் எண்டதை நிரூபிச்சபடிதான் இந்தப் புதுவருசத்தை யாழ்ப்பாணத்தார் கொண்டாடி இருக்கினம்.

இலங்கையில கூடுதலா எல்லா மாவட்டங்களின்ர ரவுண் ஏரியாக்களில ஒரு மணிக்கூட்டுக் கோபுரம் இருக்கும். அப்பிடி 'எங்களிட்டையும் சீப்பு இருக்கு, நாங்களும் சீவுவம்' எண்ட கணக்கில யாழ்ப்பாணத்திலையும் மணிக்கூட்டுக்கோபுரம் இருக்குது. ஆனால் இது மற்ற மாவட்டங்களில இருக்கிற மாதிரி பத்தோட பதினொண்டாக் கட்டின மணிக்கூட்டுக்கோபுரம் இல்லை. அதுக்கெண்டு தனியா ஒரு வரலாறே இருக்குது. 1875ஆம் ஆண்டு பிரித்தானியாவின்ர வேல்ஸ் இளவரசர் இலங்கைக்கு வந்தவர். அப்ப அவரை வரவேற்கவெண்டு 'யாழ்ப்பாணம் இளவரசர் வரவேற்புக்குழு' எண்டு ஒரு குழுவை உருவாக்கி, எல்லாச் சனத்திட்டயும் காசு வாங்கி, அந்தக் காசில இளவரசருக்கு ஒரு வெள்ளிக்கலசமும், நகையளும் செய்து குடுத்தவை. அப்பிடிச் சேர்த்த காசில கலசமும், நகையும் செய்தது போக, கனக்கக் காசு மிஞ்சிப் போட்டுது. அதை வீணாக்கக் கூடாதெண்டு, இளவரசரின்ர வருகையை ஞாபகப்படுத்திற மாதிரி, ரவுணுக்கு நடுவில ஒரு மணிக்கூட்டுக் கோபுரம் கட்டுவம் எண்டு முடிவெடுத்தவை. 1882ஆம் ஆண்டு இந்த மணிக்கூட்டுக் கோபுரத்தைக் கட்டி முடிச்சவை. அதில பொருத்தின மணிக்கூட்டை அப்ப இலங்கையின்ர ஆளுநரா இருந்த ஜேம்ஸ் லாங்டன் தன்ர செலவில வாங்கிக் குடுத்தவர். அதுக்குப் பிறகு கோட்டைச்சண்டையால மணிக்கூட்டுக் கோபுரம் சேதமானது. பிறகு இப்பத்தை பிரிட்டன் அரசர் சார்ள்ஸ் 1998ஆம் ஆண்டு குடுத்த காசில மணிக்கூட்டுக் கோபுரத்தைத் திருத்தி இயங்க வைச்சவை. இப்பிடிக் கிட்டத்தட்ட 150 வருசப் பழமையான வரலாறும், யாழ்ப்பாணத்தின்ர அடையாளம் எண்ட பெருமையும் எங்கட மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு இருக்கு.

இந்த மணிக்கூட்டுக் கோபுரத்தை ஒவ்வொரு வருசமும் நத்தார்க் காலத்தில கலர் லைற்றுகளால சோடிச்சு அதைப் பெருமெடுப்பில திறந்துவைப்பினம். உந்த சோடினை லைற்றைப் பார்த்து கனபேர் அதில நிண்டுதான் புதுவருசத்தைக் கொண்டாடுறவை. இந்த வருசமும் ஆளுநர், யாழ்ப்பாண மாவட்டச் செயலர், இளங்குமரன் எம்.பி, மாநகர மேயர் எல்லாரும் சேர்ந்துதான் உந்தச் சோடினை லைற்றுகளைத் திறந்துவைச்சவை. அப்பிடித் திறக்கேக்க, கொஞ்சம் அண்ணாந்து மேல பார்த்திருந்தால் 'ஒய்யாரக் கொண்டையாம் உள்ளுக்க ஈரும் பேனுமாம்' எண்ட பழமொழி அவைக்கு நினைவுக்கு வந்திருக்கும். ஏனெண்டால் இவ்வளவு காசு சிலவழிச்சு லைற்றால சோடினை செய்த அந்தக் கோபுரத்தில இருக்கிற மணிக்கூடு ஓடாமல் விட்டுக் கன காலமாம். எப்பவும் அந்த மணிக்கூடு 7.45 எண்டுதான் காட்டிக்கொண்டிருக்குது. அதால இந்தமுறை வருசம் பிறக்கேக்கையும் அது 7.45 எண்டுதான் பல்லிளிச்சுக் கொண்டு நிண்டது. வெளிச்சோடினைக்கு சிலவழிச்ச காசில, மணிக்கூட்டை ஓடப் பண்ணியிருக்கலாமே. அதைவிட்டிட்டு செத்த கிளிக்குச் சிங்காரம் செய்திருக்கினம் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** பணவரவுக்கு வாய்ப்புண்டு. சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப்பட்டாலும், எளிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும். உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமை அவசியம்.

**இடபம்:** குடும்பத்தில் உறவினர்களால் செலவுகள் ஏற்பட்டாலும் அதனால் மகிழ்ச்சியே ஏற்படும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். பிள்ளைகளை அனுசரித்துச் செல்லவும். புதிய முயற்சிகளில் மட்டும் கவனம் தேவை.

**மிதுனம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள்

**கடகம்:** சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத்துணையின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் உதவியுடன் சுபநிகழ்ச்சிக்கான பேச்சு வார்த்தை சாதகமாகமுடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கும். வீண் விவாதங்களில் ஈடுபடவேண்டாம்.

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். இன்று குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதாக இருந்தால் ஒருமுறைக்குப் பல முறை யோசித்து எடுப்பது நல்லது. பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டிவரும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத்துணைமூலம் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். பழைய கடன்களைத் தந்து முடிப்பீர்கள்.

**மகரம்:** கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரும். சிலருக்கு எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** கணவன் – மனைவிக்கிடையே சிறு சிறு கருத்துவேறுபாடுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாகும். உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.



மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில், பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. பேராலய வளாகத்தில் அமைக்கப்பட்ட பெயர்ப்பலகையையும், மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை திறந்துவைத்தார். (க-56)

## பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஜன.2

நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவில் வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்கள ஏற்பாட்டில் 2026ஆம் ஆண்டுக்கான ஆடை வடிவமைத்தல் மற்றும் மனைப்பொருளியல் டிப்ளோமா பயிற்சி வகுப்புகள் நெடுந்தீவு மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறவுள்ளன.

இதில் தையல், கேக் ஐசிங், மணப்பெண் அலங்காரம் ஆகிய பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மேலதிக விவரங்களுக்கு பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலருடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

## யாழில் வேறுபட்ட விலைகளில் இறைச்சி, முட்டை விற்பனை!

யாழ்ப்பாணம், ஜன.2


யாழ்.மாவட்டத்தில் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு, கோழி இறைச்சி மற்றும் முட்டை ஒவ்வொரு இடத்திலும் வேறுபட்ட விலையில் விற்பனை செய்யப்படுகின்றன என்று நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

முட்டை ஒன்று 36 ரூபா முதல் 40 ரூபாவுக்கும், கோழி இறைச்சி ஒரு கிலோ ஆயிரம் ரூபா முதல் ஆயிரத்து 250 ரூபா வரைக்கும் ஒவ்வொரு இடங்களிலும் மாறுபட்ட விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. இதுதொடர்பில் நுகர்வோர் அதிகாரசபையினர் அவதானித்து நிர்ணய விலையை மீறி விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும்என்றும் நுகர்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-17)



வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் புதிய வருட விசேட ஆராதனை நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன. ஆலயத்தின் பங்குத் தந்தை கிறிஸ்தோபர் அந்தோனிதாஸ் டலீமா தலைமையில் இடம்பெற்ற விசேட ஆராதனையில் திருப்பலி ஒப்பக்கொடுக்கப்பட்டதோடு, விசேட வழிபாடுகளும் இடம்பெற்றன. (க-110)

2026 ஆம் ஆண்டு ஆங்கிலப் புத்தாண்டை வரவேற்கும் முகமாக நள்ளிரவு 12 மணிக்கு யாழ். நகர மணிக்கூட்டுக் கோபுரத்தடியில் வண்ணமயமான வானவேடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (க-66)



## யாழ்.நகரப் பகுதிகளில் பொலிஸார் கண்காணிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.2

புத்தாண்டை முன்னிட்டு யாழ்.நகருக்குள் வருகைதருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் பொலிஸார் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்.நகரின் மையப்பகுதி மற்றும் முற்றவெளியில் அதிகளவான மக்களைக் காணக்கூடியதாகவுள்ளது. இதனால் களவு மற்றும் விபத்துகளைத் தடுக்கும் நோக்குடன் பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர். நகருக்குள் நுழையும் வாகனங்கள் சோதனையிடப்படுவதுடன், சனநெரிசலான பகுதிகளில் வீதிப் போக்குவரத்தைச் சீர்செய்யும் பணிகளிலும் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (க-17)



வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் ஆங்கிலப் புத்தாண்டு பிறந்த நள்ளிரவு 12 மணிக்கு தேரடியில் தீபங்கள் ஏற்றி புத்தாண்டை வரவேற்றனர். (க-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராடாமல் எதுவுமில்லை

நீண்டகாலமாகப் புகைந்துகொண்டிருந்த தையிட்டி திஸ்ஸ விகாரை விவகாரம், தற்போது ஒரு முடிவை நோக்கி நகரத் தொடங்கியிருக்கிறது. பல மாதங்களாக, ஏன் பல வருடங்களாக இழுபறியில் இருந்த இந்தச் சட்டவிரோதக் கட்டுமானப் பிரச்சினைக்கு எட்டப்பட்டுள்ள தற்போதைய தீர்வை, பாதிக்கப்பட்ட மக்களுக்கான முழுமையான நீதி என்று கொண்டாடிவிட முடியாது. ஆனாலும், மென்மேலும் சிக்கலடைந்து செல்லும் ஒரு பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும், மக்களின் இயல்பு வாழ்வை மீளக்கட்டியெழுப்புவதற்கும் கசப்பானதெனினும் இந்தத் தீர்வை ஏற்றுக்கொள்ளவேண்டிய கட்டாயம் தற்போது உருவாகியிருக்கிறது. தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரை ஆக்கிரமித்துள்ள பொதுமக்களின் காணிகள் படிப்படியாக விடுவிக்கப்படும் என்ற முடிவு, பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சற்று ஆறுதலைத் தந்தாலும், அதன் மறுபக்கம் வேதனையானது. விகாரையின் பிரதான கட்டுமானம் அமைந்துள்ள காணியை இனி ஒருபோதும் விடுவிக்கமுடியாது என்ற யதார்த்தம், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்கிற கோட்பாட்டை கேள்விக்குறியாக்கியுள்ளது. நாட்டின் சட்டங்களை அப்பட்டமாக மீறி, தனியார் காணியில் அத்துமீறி எழுப்பப்பட்ட அந்த விகாரை, தொடர்ந்தும் அங்கேயே நிலைத்திருக்கப்போகிறது என்பது, அநீதிக்குக் கிடைத்த அங்கீகாரமாகவே பார்க்கப்படவேண்டியுள்ளது.

இந்த விவகாரம் வெறுமனே ஒரு விகாரை மற்றும் காணிப் பிரச்சினை சார்ந்தது மட்டுமல்ல; இது இந்த நாட்டின் அரசியல் மற்றும் நிர்வாகக் கட்டமைப்பில் புரையோடிப் போயிருக்கும் பெரும் குறைபாடுகளை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. பொதுவாக ஒரு நாட்டில் புதிதாக ஒரு கட்டுமானத்தை உருவாக்கும்போது, அதற்கெனப் பின்பற்றப்படவேண்டிய இறுக்கமான சட்டதிட்டங்கள், நகர அபிவிருத்திச்சபையின் விதிமுறைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் அனுமதிகள் எனப் பல படிமுறைகள் உள்ளன. ஆனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் திடீரென முளைக்கும் பௌத்த வழிபாட்டிடங்களுக்கு இவை எவையும் பொருட்டாக இருந்ததில்லை. இராணுவ பலத்துடனும், அதிகாரத் திமிருடனும் நினைத்த மாத்திரத்தில் விகாரைகளை அமைத்துவிட்டு, புத்தர் சிலையை ஒருவாறு பிரதிஷ்டை செய்துவிட்டால், அதன் பின்னர் அதனை அகற்றமுடியாது என்ற எழுதப்படாத விதியை நடைமுறைப்படுத்துவதே இங்கு வாடிக்கையாகிவிட்டது. சட்டவிரோதமாகப் பொதுமக்களின் காணிகளில் ஒரு மதத்தலத்தை அமைக்க அனுமதித்துவிட்டு, பின்னர் 'மத உணர்வு'என்ற போர்வையில் மக்கள் அந்தக் காணிகளைத் தாரைவார்த்தே ஆகவேண்டும் என்று நிர்ப்பந்திக்கும் போக்கு மிகவும் ஆபத்தானது. இத்தகைய முன்னுதாரணங்கள் எதிர்காலத்தில் சமூகங்களுக்கிடையில் பெரும் விரிசல்களை உண்டாக்கும். தனியார் நிலங்களை அபகரித்து எழுப்பப்படும் வழிபாட்டுத்தலங்கள், அமைதியையும் ஆன்மிகத்தையும் போதிப்பதற்குப் பதிலாக, வெறுப்பையும் ஆக் கிரமிப்பையுமே பறைசாற்றுகின்றன என்பதை அரசாங்கம் உணரவேண்டும். சட்டவிரோதக் கட்டுமானங்களைத் தடுப்பதும், சட்டத்தை மீறுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதும் அரசின் தார்மீகக் கடமையாகும்.

மறுபுறத்தில், தையிட்டி விவகாரம் தமிழ் மக்களுக்கு மிக முக்கியமானதொரு பாடத்தைக் கற்றுத் தந்திருக்கிறது. அதுதான் போராடாமல் எதுவும் கிடைத்துவிடப்போவதில்லை என்ற பாடம்தான். திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டபோது, பல தரப்பிலிருந்தும் விமர்சனங்கள் எழுந்தன. இது அரசியலாக்கப்படுவதாகக் குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டன. போராட்டக்காரர்கள் மீது பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. ஆயினும், எதற்கும் செவிசாய்க்காமல், எதற்கும் அடிபணியாமல் மக்கள் முன்னெடுத்த அந்தத் தொடர்ச்சியான அறவழிப்போராட்டமே, இன்று அதிகாரத் தரப்பைத் திரும்பிப் பார்க்கவைத்திருக்கிறது. விகாரையால் அபகரிக்கப்பட்ட காணிகளைக் கட்டம் கட்டமாகவேனும் விடுவிக்கும் நிலைக்கு அரசாங்கத்தை இறங்கிவரச் செய்தது அந்தப் போராட்டத்தின் வலிமையே அன்றி வேறில்லை. ஒருவேளை, மக்கள் மௌனமாக இருந்திருந்தால் அல்லது ஆரம்பகட்ட எதிர்ப்புகளுடன் சோர்ந்து போயிருந்தால், விகாரையால் சுவீகரிக்கப்பட்ட அத்தனை காணிகளும் இன்று பறிபோயிருக்கும். எஞ்சிய காணிகளையாவது மீட்கமுடிந்தது என்பது, மக்கள் திரள் போராட்டத்துக்கு இருக்கும் சக்தியை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளது.

தையிட்டி தீர்வு என்பது ஒரு முழுமையான வெற்றியல்ல, ஆனால் அது ஒரு முக்கியமான முன்னகர்வாகும். விகாரை அங்கேயே இருப்பது சட்டத்தின் தோல்வியாக இருந்தாலும், மக்கள் நிலங்களை மீட்பது போராட்டத்தின் வெற்றியாகும். எதிர்காலத்தில் இத்தகைய ஆக்கிரமிப்புகள் நிகழாமல் இருக்க வேண்டுமாயின், அரசாங்கம் தனது நிலக்கொள்கையிலும், மதத்தலங்கள் அமைப்பது தொடர்பான சட்டநடைமுறைகளிலும் பாரபட்சமற்ற தன்மையைக் கடைப்பிடிக்கவேண்டும். அதேவேளை, தமக்கான அநீதிக்கு எதிராகத் தொடர்ந்து குரல் கொடுப்பதன் மூலமே உரிமைகளைத் தக்கவைக்கமுடியும் என்பதைத் தமிழ் மக்கள் நினைவிற்கொள்ளவேண்டும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111


செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




## பொய்யாமொழி

**கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்**

**பொருள் :**தன்னைவிட அறிவில் மூத்த பெருந்தகையாளரின் முன்னே வணங்கி நிற்கும் பண்பு இல்லாவிடில் என்னதான் ஒருவர் கற்றிருந்தாலும் அதனால் என்ன பயன்? ஒன்றுமில்லை.



# அரசியல் பிளவுகளை ஒதுக்கி நாட்டைக் கட்டியெழுப்புவோம்

## மல்கம் ஆண்டகை தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.2**

**'முதலில் நாடு' என்ற எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு அனைவரும் புதிய ஆண்டில் செயற்படவேண்டும் எனக் கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், கடுமையான நெருக்கடிகளுக்கும் பேரழிவுகளுக்கும் முகங்கொடுத்துள்ள இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப ஒற்றுமையுடனும் சகோதரத்துவத்துடனும் அனைவரும் இணைந்து செயற்படவேண்டும். பகைமை, அரசியல் பிளவுகள், எதிர்மறை மனப்பாங்குகள் இவற்றை ஒதுக்கிவைத்து நாட்டை மீள்கட்டியெழுப்பும் பணியில் ஒன்றிணையவேண்டும்.

ஒற்றுமையின் மூலமே, தற்போது கடுமையான பொருளாதாரச் சுமைகளைச் சந்தித்துவரும் மக்களை மீட்டெடுக்கத் தேவையான வலிமையும் தைரியமும் நமக்குக் கிடைக்கும் - என்றார். (ச-இ)



# 2025 இல் ரூபா வீழ்ச்சி

கொழும்பு,ஜன.2

2025 ஆம் ஆண்டில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 5.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. மத்திய வங்கியின் தரவுகளின்படி, நேற்று முன்தினம் வர்த்தக முடிவில் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 306.29 ரூபாவாகவும், விற்பனை விலை 313.83 ரூபாவாகவும் காணப்பட்டது.

2024 டிசெம்பர் 31ஆம் திகதியன்று அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 288.32 ரூபாவாகவும், விற்பனை விலை 297.01 ரூபாவாகவும் காணப்பட்டதாக இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# சிறைச்சாலை ஊடகப் பேச்சாளராக கஜநாயக்க நியமனம்

கொழும்பு, ஜன.2

சிறைச்சாலை ஆணையாளரும் ஊடகப் பேச்சாளருமான ஜகத் வீரசிங்க ஓய்வுபெற்ற நிலையில், புதிய சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளராக சிரேஷ்ட சிறைச்சாலைகள் அதிகாரி ஏ.சி. கஜநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கான உத்தியோகபூர்வ நியமனக்கடிதம் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் நிஷாந்த தனசிங்கவால் வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)



# திசைகாட்டிக்கு ஆதரவளித்த மு.கா. உறுப்பினர் இடைநீக்கம்

கொழும்பு.ஜன.2

கொழும்பு மாநகரசபையின் வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தமைக்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கொழும்பு மாநகரசபை உறுப்பினர் சோஹாரா புகாரி கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

அவர் மீது ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் கூறியுள்ளார். (ச-இ)



# 2025ஆம் ஆண்டில் 114 துப்பாக்கிச்சூடுகள்

## 60 பேர் உயிரிழப்பு

கொழும்பு,ஜன.2

கடந்த 2025ஆம் ஆண்டில் 114 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதில் 60 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 57 பேர் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் பெரும்பாலானவை பாதாள உலகக் கும்பல்களுக்கு இடையிலான தகராறு காரணமாக இடம்பெற்றுள்ளன. அதேவேளை நேற்றுமுன்தினம் மாத்திரம் இரண்டு துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

**நாளை**

சனிக்கிழமை - மார்கழி 19

03.01.2026


சுபநேரம் : 12.28 - 01.58

ராகுகாலம் : 07.58 - 09.28


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க்கட்சிகளிடம் ஒற்றுமையுமில்லை தமிழ் மக்களுக்குத் தீர்வுமில்லை!

## அரசியல் ஆய்வாளர் யோதிலிங்கம் தெரிவிப்பு



**கொழும்பு, ஜன.2**

**மாகாணசபைத் தேர்தலுக்கு அழுத்தம் கொடுப்பது, அரசியல் தீர்வில் ஒருங்கிணைந்து செயற்படுவது என்கின்ற தீர்மானங்களை எடுத்தாலும் அதற்கான செயற்றிட்டங்கள் எவையும் வகுக்கப்படவில்லை. தமிழ்க்கட்சிகள் மக்களைத் திரளாக்கும் ஆற்றல் கொண்டவை அற்று ஒற்றுமையின்றிக் காணப்படுகின்றன என்று அரசியல் ஆய்வாளரும், சட்டத்தரணியும், சமூக விஞ்ஞான ஆய்வு மைய இயக்குநருமான சி.அ.யோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை தமிழரசுக் கட்சிக்கோ அல்லது ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கோ கொள்கை ரீதியான இறுக்கம் கிடையாது. குறுக்கு வழிகளிலாவது தேர்தலில் வெற்றி பெறுவதே அவர்களின் ஒரே இலக்காக உள்ளது.

அண்மையில் இரு தரப்புக்கும் இடையில் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் எட்டப்பட்ட முடிவுகள் வெறும் வாய்மொழி இணக்கப்பாடுகளே தவிர, அவை ஒப்பந்தங்களாகக் கையெழுத்திடப்படவில்லை. எழுத்துபூர்வமான உடன்படிக்கைகளுக்கே ஆயுள் குறைவாக இருக்கும் நிலையில், இந்த வாய்மொழி இணக்கங்கள் நிலைக்கும் எனக்கூற முடியாது.

தமிழரசுக் கட்சியால் தனித்துப் போட்டியிட்டு முதலமைச்சர் பதவியைப் பெறமுடியாது என்பது சுமந்திரனுக்குத் தெரியும்.

கஜேந்திரகுமாரைத் தனிமைப்படுத்துவதும், எப்படியாவது மாகாணசபைத் தேர்தலில் அதிகாரத்தைப் பிடிப்பதுமே இந்தப் பேச்சு வார்த்தைகளின் நோக்கமாக இருக்கலாம். தமிழ்த் தேசியப் பேரவையின் தமிழ்நாட்டுப் பயணம் மற்றைய கட்சிகள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் தமிழரசுக் கட்சி தற்போது இந்தியத் தூதுவரைச் சந்திப்பதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறது.

மக்களின் எதிர்பார்ப்பு கூட்டுச்செயற்பாடாக இருப்பதால், தாங்கள் கூட்டாகச் சந்திப்பது போன்ற பிம்பத்தை உருவாக்க முனைகின்றனர்.

அந்தவகையில் தமிழ்க்கட்சிகள் மக்களைத் திரட்டும் ஆற்றலை இழந்து, ஒற்றுமையின்றிச் சிதறிக் காணப்படுகின்றன - என்றார். (ச)



## சித்திரத்தேரில் வரதராஜப் பெருமாள்

யாழ்ப்பாணம், ஜன.2

வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய மார்கழி மாத வைகுண்ட ஏகாதசி மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா வைகுண்ட ஏகாதசித் திருநாளான கடந்த செவ்வாய்க்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

வசந்த மண்டபப் பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து வரதராஜப் பெருமாள் தேவியர் சகிதம் திருநடனத்துடன் உள்வீதியில் எழுந்தருளி முற்பகல்10.05 மணியளவில் சித்திரத்தேரில் ஆரோகணம் செய்தனர்.

சிதறு தேங்காய்கள் உடைக்கப்பட்டதைத் தொடர்ந்து அடியவர்களின் அரோகராக் கோஷ முழக்கங்களுடன் சித்திரத் தேர்ப்பவனி இடம்பெற்றது. (ச-66,17)




சாவகச்சேரி மகிழங்கேணி கல்விநிலையத்தில் கல்வி கற்கும் 40 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கனடாவில் வசிக்கும் மனிதநேய சமூக செயற்பாட்டாளரான காமலிற்றாவால் வழங்கப்பட்ட நிதியில் பிரீத்தி அறக்கட்டளையின் 'கல்விக்கு கரம் கொடுப்போம்' எனும் செயற்றிட்டத்தின்கீழ் இந்தக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (எ-41-27)



## இளையோர்களிடையே மொழிப்பாலம் நிகழ்வு

மன்னார், ஜன.2

தமிழ் மற்றும் சிங்கள இளையோருக்கிடையில் மொழி மற்றும் கலாசாரப் புரிதலை மேம்படுத்தும் வகையில் மொழிப்பாலம் நிகழ்ச்சியின் ஆரம்ப நிகழ்வு மாந்தை மேற்கில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு ஏற்பாடு செய்த இந்நிகழ்வு தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளது.

மன்னார் மற்றும் கம்பஹா மாவட்ட இளைஞர், யுவதிகளிடையே மொழிப்பாலம் நட்புறவை மேம்படுத்தும் வகையில் குறித்த நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. (ச-41-56)

## தொழில்நுட்பவியல் சேவைக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜன. 2

வடக்கு மாகாணத் தொழில்நுட்பவியல் சேவையின் குடியேற்ற உத்தியோகத்தர் தரம்-III பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவால் நடத்தப்படவுள்ள திறந்த போட்டிப் பரீட்சை மூலமாகவே இப்பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

இந்தப் பதவிக்கான ஆட்சேர்ப்புத் தொடர்பான முழுமையான வர்த்தமானி அறிவித்தல் மற்றும் விண்ணப்பப்படிவங்களை வடக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.np.gov.lk ஊடாகப் பார்வையிடவும், பதிவிறக்கம் செய்து கொள்ளவும்முடியும்.

தகைமையுடைய விண்ணப்பதாரர்கள் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாகப் பூர்த்திசெய்யப்பட்ட தமது விண்ணப்பங்களை 2026.01.16ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஆழ்வாப் பிள்ளை சிறி அறிவித்துள்ளார். மேலதிக விவரங்களை இணையத்தளத்தின் 'Exam and Recruitment Advertisement' எனும் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-66)

## வினைத்திறனான சேவையை கூட்டுறவுச்சங்கங்கள் வழங்குக

### கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் வலியுறுத்து



யாழ்ப்பாணம்,ஜன.2

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மக்களுக்கு வினைத்திறனான சேவைகளை வழங்க வேண்டும். இதற்கு பணியாளர்களின் அர்ப்பணிப்பான பங்களிப்பு அவசியம் என்று சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் க.சசிகரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் அண்மையில் இடம்பெற்ற ஒளிவிழா நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் அன்பு, கருணை கொண்டவர்களாக இருக்கவேண்டும்.

கூட்டுறவுத் துறையில் பல வருடங்கள் பணியாற்றி, சங்கங்களின் வளர்ச்சிக்கு பாடுபட்ட பணியாளர்களுக்கு மதிப்பளிப்பதன் மூலம், கூட்டுறவுத்துறை இன்னும் பரிமாணம் பெறும். 2026ஆம் ஆண்டு கூட்டுறவுத் துறையை மேலும் வளர்ச்சி பெறச் செய்ய சங்கங்களின் பணியாளர்கள் ஒன்றுபட்டு செயலாற்றவேண்டும்- என்றார். (க-17)

சுதந்திர மனித உரிமைகள் அமைப்பின் ஒளிவிழாவும் பரிசளிப்பு நிகழ்வும் கொழும்புத்துறை சனசமூக நிலையத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டி உள்ளிட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பரிசில்களும் வழங்கப்பட்டன. கலைநிகழ்வுகளும் நடைபெற்றன. (க-159)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிகாட்டுவானில் பொதுக்கழிப்பறை

யாழ்ப்பாணம்,ஜன.2
குறிகாட்டுவானில் வேலணைப் பிரதேசசபையால் பொது மலசலகூடம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நவீன வசதிகளுடன் அமைக்கப்படும் இந்த மல சலகூடம் விரைவில் மக்கள் பயன்பாட்டுக்குத் திறக்கப்படும் என்று பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர். (க-17)


## மரண அறிவித்தல்



பிறப்பு 14.01.1958 இறப்பு 31.12.2025

**கனகரத்தினம் துரைராசசிங்கம் (போதகர்- மெக்கானிக்)**

ஒட்டுமடத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட கனகரத்தினம் துரைராசசிங்கம் (போதகர்) அவர்கள் கடந்த 31.12.2025 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் பூமணி தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற தங்கத்துரை பூமணி தம்பதியரின் மருமகனும், மங்களேஸ்வரி யின் அன்புக் கணவரும், கஜன், ஜனுஜா, ரிசாழினி, சிந்துஜா, தர்சலா ஆகியோரின் அன்புத் தந்தையும், மணிவண்ணனின் மாமனாரும், ருத்ரேஷின் பாசமிகு பேரனும், பாக்கியம், குதுகலகுமாரி, துரைசிங்கம் (டென்மார்க்), நிர்மலகுமாரி , வசந்தகுமாரி (சுவிஸ்), பிரபாகரன் (பிரான்ஸ்), பாஸ்கரன், ரஜனி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சண்முகராசா, நாதன், அமரர் தில்லைநாதன், யோகராசா, மதிவதனி, செந்தில்குமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2026) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.40, ஒட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
0777 6070 02

(CS 28776) A

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 29 . 10 . 1973
மறைவு 04 . 12 . 2025

**அமரர் மகேஸ்வரன் மதீதரன் (மதீன்)**
உரிமையாளர்
**(Media Electro Mart, Mahesh & Sons - Chavakachcheri)**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (02.01.2026) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் முகத்துவாரத்தில் உள்ள அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெற்று அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (03.01.2026) சனிக்கிழமை கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் அவரது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்தித்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும் மற்றும் முகநூல், மின்னஞ்சல் ஆகியவை மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறி அனுதாபங்களை தெரிவித்தவர் களுக்கும், மலர்வளையங்கள், மலர் மாலைகள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலி பதாதைகள் மூலம் அஞ்சலி செலுத்திய வர்களுக்கும், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல வழிகளிலும் உதவிகள் செய்த அன்பு நெஞ்சங்கள் அனை வருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
தயவு செய்து இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

White House,
No.7, 4/3, 55th Lane,
Colombo-06, Wellawatta.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(CS 30917)

# மரண அறிவித்தல்



தோற்றம் 07.11.1971 மறைவு 31.12.2025

## சுப்பிரமணியம் சசிகரன்

இணுவிலைப் பிறப்பிடமாகவும், இராஜேந்திரா வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சசிகரன் அவர்கள் 2025.12.31 புதன்கிழமை அகால மரணமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், செபஸ்தியாம்பிள்ளை - இராசாத்தியன் தம்பதியரின் மருமகனும், ஜெயந்தியின் பாசமிகு கணவனும், ஒலின்ரன், ஒலின்ரினா, கமில்டன் (பிரான்ஸ்), அலன்ரினா, ஹரன்சியா ஆகியோரின் நேசமிகு தந்தையும், காந்தன், வட்டன், பொலிஸ் ஆகியோரின் சகோதரனும், வினோதினி, அன்ரனிசாள்ஸ் (அஜித்), விஜயதீபன் (அஜெய்) ஆகியோரின் மாமனாரும், லிகாஷினி, மேரி அனஸ்ரினா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான ஜெயந்திரன், வசந்தி மற்றும் குட்டி, கவிதா, றதி, மாழினி (சுவிஸ்), அன்ரன் (சுவிஸ்), சுகந்தி (சுவிஸ்), தமயந்தி ஆகியோரின் மைத்துனரும், சிவரூபன் (சுவிஸ்), ராணி (சுவிஸ்), பகிதரன் (சுவிஸ்), பரமேஸ்வரி, நிக்சி ஆகியோரின் உடன்பிறவாத சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2026) வெள்ளிக்கிழமை நடைபெற்று பூதவுடல் மாலை 03.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
077 383 4522, 076 460 2241
077 707 0691, 070 398 5096

தகவல்:
குடும்பத்தினர்

(CS 60349) E


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புடைவைக் கைத்தொழில் திணைக்களம்

## 2026/2027ஆம் கல்வி ஆண்டுக்காக புடைவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல்

புடைவைக் கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் இயங்கிவரும் புடைவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களில், 2026 பெப்ரவரி மாதம் ஆரம்பமாகவுள்ள பின்வரும் பயிற்சி கற்கை நெறிகளுக்காக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த கற்கை நெறிகள் எவ்விதக் கட்டணமுமின்றி முற்றிலும் இலவசமாக நடத்தப்படும்.

01. நடத்தப்படும் கற்கைநெறியின் பெயரும் காலமும்

I. கைத்தறி புடைவைக் கைத்தொழில் சான்றிதழ் கற்கைநெறி - 06 மாதங்கள்

இது 06 மாத கால முழுநேர கற்கைநெறியாகும் என்பதுடன் கைத்தறி புடைவைக் கைத்தொழிலில் ஈடுபடுவதற்குத் தேவையான அடிப்படை அறிவை வழங்குவது இக் கற்கைநெறியின் மூலம் மேற்கொள்ளப்படும்.

II. கைத்தறி புடைவைக் கைத்தொழில் டிப்ளோமா கற்கைநெறி - 12 மாதங்கள்

இது 12 மாத கால முழுநேரப் பாடநெறியாகும் என்பதுடன் அதன் இறுதியில் நடத்தப்படும் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு புடைவைக் கைத்தொழில் டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.

02. சேர்த்துக்கொள்வதற்கான தகைமைகள்

I. கைத்தறி புடைவைக் கைத்தொழில் சான்றிதழ் கற்கைநெறி

- அரசாங்கப் பாடசாலையொன்றில் 8 ஆம் தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியன்று 16 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

II. கைத்தறி புடைவைக் கைத்தொழில் டிப்ளோமா கற்கைநெறி

- சிங்களம்/தமிழ் மற்றும் கணிதம் உட்பட 06 பாடங்களில் க.பொ.த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- 18 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**கற்கைநெறிகளைப் பயில்வதன் மூலம் கிடைக்கும் அனுகூலங்கள்**

1. கற்கை நெறியின் இறுதியில் தெரிவுசெய்யப்படும் பயனாளிகளுக்கு, கைத்தறி புடைவைக் கைத்தொழில் துறையிலான தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் இணைந்துகொள்வதற்கான வாய்ப்பு மற்றும் அதன் மூலம் கைத்தறி புடைவைக் கைத்தொழில் துறையிலான வியாபார வாய்ப்புகளில் இணைவதற்கான பின்னணியை உருவாக்கிக்கொள்ள முடிதல்.
2. கைத்தறி புடைவைக் கைத்தொழில் துறையில் சுயதொழில் வாய்ப்புடையவராகச் செயற்பட முடிதல்.
3. புடைவைக் கைத்தொழில் ஆலோசகர் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கான வாய்ப்பினைப் பெறமுடிதல். (உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என்பதுடன் போட்டிப் பரீட்சை மூலம் சேர்த்துக்கொள்ளப் படுவர்).

I. கற்கை நெறியைப் பயிலும் காலப்பகுதியில் 500.00 ரூபா நாளாந்தக் கொடுப்பனவும் நிறுவனத்திற்குரிய சீருடைகளும் வழங்கப்படும்.

II. விடுதி வசதிகளைக் கொண்ட பயிற்சி நிறுவனங்களில் அனுமதி பெறும் மாணவர்களுக்கு இலவச விடுதி வசதிகள் வழங்கப்படும். (உணவுச் செலவுகள் இன்றி)

03. பின்வரும் மாதிரி விண்ணப்பப் படிவத்துடன் பிறப்புச் சான்றிதழ், பாடசாலை விடுகைப் பத்திரம், க.பொ.த. (சா.தர) மற்றும் க.பொ.த. (உ.தர) - (இருப்பின்) ஆகிய சான்றிதழ்களின் விண்ணப்பதாரரால் சான்றுபடுத்தப்பட்ட நிழற்படப் பிரதிகளை இணைத்து 2026.01.31 ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

| தொ. இல. | புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் மற்றும் முகவரி | மாவட்டம் | விடுதி வசதிகள் | மொழி மூலம் |
|---|---|---|---|---|
| 1 | **புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம்** 280/1, காலி வீதி, கட்டுபெத்த, மொரட்டுவ. | கொழும்பு | உள்ளன | சிங்களம் |
| 2 | **புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம்** ஹக்மன வீதி, மாத்தறை | மாத்தறை | உள்ளன | சிங்களம் |
| 3 | **புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம்** கிரம, வலஸ்முல்ல. | ஹம்பாந் தோட்டை | உள்ளன | சிங்களம் |
| 4 | **புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம்** அருப்பல வீதி, வட்டபுலுவ, கண்டி. | கண்டி | உள்ளன | சிங்களம் |
| 5 | **புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம்** கெட்டம்பே, பேராதனை. | கண்டி | உள்ளன | சிங்களம் |
| 6 | **புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம்** கினிகம, பண்டாரவளை. | பதுளை | உள்ளன | சிங்களம் |
| 7 | **புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம்** கோன்கஹமுல, பலாபத்வல, மாத்தளை. | மாத்தளை | உள்ளன | சிங்களம் |
| 8 | **புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம்** மல்பிட்டிய, போயகனே, குருநாகல். | குருநாகல் | உள்ளன | சிங்களம் |
| 9 | **புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம்** கொட்டல, வேயாங்கொடை. | கம்பஹ | உள்ளன | சிங்களம் |
| 10 | **புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம்** மிஹிரிகம, தலாவ. | அனுராதபுரம் | உள்ளன | சிங்களம் |
| 11 | **புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம்** பின்னவல, ரம்புக்கனை. | கேகாலை | இல்லை | சிங்களம் |
| 12 | **புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம்** கலேகான வீதி, கிங்தொட்ட, காலி. | காலி | இல்லை | சிங்களம் |
| 13 | **புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம்** பன்ட் வீதி, சம்மாந்துறை. | அம்பாறை | உள்ளன | சிங்களம் தமிழ் |
| 14 | **புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம்** 194, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம் | உள்ளன | தமிழ் |

பணிப்பாளர்,
புடவைக் கைத்தொழில் திணைக்களம், 3 வது மாடி,
பொதுச் செயலகக் கட்டிடம், மாளிகாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 0112-322895, 0112-322897
மின்னஞ்சல்: dtidev2000@gmail.com

### மாதிரி விண்ணப்பப் படிவம்

**2026/2027 ஆம் கல்வி ஆண்டுக்காக புடவைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல்**

1. முழுப் பெயர் (சிங்களத்தில் / தமிழில்):
2. முழுப் பெயர் (ஆங்கிலத்தில்):
3. தனிப்பட்ட முகவரி : ....................
4. தொலைபேசி இலக்கம் : ....................
5. வதியும் மாவட்டம் : ....................
6. பிறந்த திகதி : ....................
7. தேசிய அடையாள அட்டை இலக்கம்: ....................
8. பால் : ....................
9. திருமணமானவரா/திருமணமாகாதவரா : ....................
10. கல்வித் தகைமைகள் : ....................
11. அனுமதிபெற எதிர்பார்க்கும் நிறுவனம் : ....................
12. பயில எதிர்பார்க்கும் கற்கைநெறி :
13. விடுதி வசதி தேவையா என்பது : தேவை / தேவையில்லை

| | |
|---|---|
| கைத்தறி புடவைக் கைத்தொழில் சான்றிதழ் கற்கைநெறி – (06 மாதங்கள்) | |
| கைத்தறி புடவைக் கைத்தொழில் டிப்ளோமா கற்கைநெறி – (12 மாதங்கள்) | |

மேற்குறிப்பிட்ட தகவல்கள் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்

திகதி : ....................

....................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்லைன் மோசடிகள் 2025இல் அதிகரிப்பு!

**கொழும்பு, ஜன.2**

**2025ஆம் ஆண்டில் சமூக வலைத்தளத் துன்புறுத்தல்கள் மற்றும் மோசடிகள் தொடர்பில் 12 ஆயிரத்து 650க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் குறிக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதுதொடர்பில் இலங்கைத் தகவல் பாதுகாப்புப் பொறியியலாளர் சாருகா தமுனுபோல தெரிவிக்கையில்,

முறைப்பாடுகளில் கணிசமான ளவில் போலிக்கணக்கு, 'ஹக்' செய்யப்பட்ட கணக்குகள் மற்றும் சமூக ஊடகத் தளங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் நிதி மோசடிகள் என்பன அடங்குகின்றன.

அத்துடன் வெறுக்கத்தக்க அல்லது துஷ்பிரயோகம் செய்யும் உள்ளடக்கம், பெரியவர்களின் பாலியல் துன்புறுத்தல்கள் ஆகியவை அதிகமாக இடம்பெற்றுள்ளன. தகவல் தொடர்பு, வர்த்தகம் மற்றும் நிதி நடவடிக்கைகளுக்கு டிஜிற்றல் தளங்களை நம்பியிருப்பது அதிகரித்து வருகின்றது. சைபர் குற்றவாளிகள் தொடர்ந்து அதிநவீன மற்றும் மோசடி முறைகளைப் பயன்படுத்துகின்றனர்.

எனவேபொதுமக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும். தனிப்பட்ட அல்லது நிதித் தகவல்களை ஒன்லைனில் பகிர்வதைத் தவிர்க்க வேண்டும், சந்தேகத்துக்கிடமான செய்திகள் மற்றும் இணைப்புகளைச் சரிபார்க்கவேண்டும்.

இதுதொடர்பில் பொதுமக்கள் முறைப்பாடுகளை அளிக்க 101 என்ற எண்ணுக்குத் தொடர்பு கொள்ளலாம் அல்லது report@cert.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்- என்றார். (ச-இ)



## நிரந்தர நியமனத்தை வழங்கக்கோரி ம. உ. ஆணைக்குழுவில் முறைப்பாடு

மன்னார், ஜன.2

மன்னாரில் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு ஐந்து ஆண்டுகள் கடந்தும் நிரந்தர நியமனம் வழங்கப்படாதநிலையில், அவர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மன்னார் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்துள்ளனர். நிரந்தர நியமனம் வழங்கக்கோரி பல போராட்டங்களை முன்னெடுத்தபோதும், கடந்த அரசாங்கமும், தற்போதைய அரசாங்கமும் இதுதொடர்பாகக் கவனத்திற்கொள்ளவில்லை என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நாடளாவிய ரீதியில் நிரந்தர ஆசிரியர் நியமனத்தை வழங்கக்கோரி இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் உள்ள சுமார் 170 பேர் இந்த முறைப்பாட்டில் கையொப்பம் இட்டுள்ளனர்.(எ-56)



பருத்தித்துறை குளோபல் முன்பள்ளிச் சிறார்களால் சேகரிக்கப்பட்ட உண்டியல் பணத்திலிருந்து டித்வா புயல் காரணமாகப் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தின் குமரபுரம் கிராம அலுவலர் பிரிவின் கீழுள்ள இரண்டு முன்பள்ளிச் சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள் கையளிக்கப்பட்டுள்ளன. இந்த முன்மாதிரிச் செயற்பாட்டுக்கு பலரும் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளனர். (ச-113)

## ஐ.ம.ச. உறுப்பினர் கட்சியால் நீக்கம்!

கொழும்பு,ஜன.2

கொழும்பு மாநகரசபையின் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஒருவரின் கட்சி உறுப்புரிமையை அந்தக் கட்சி அதிரடியாக நீக்க உத்தரவிட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாநகரசபை உறுப்பினர் ஷேன் டேனியல் ராம் என்பவரே கட்சி உறுப்புரிமையிலிருந்துநீக்கப்பட்டுள்ளார். கொழும்பு மாநகரசபையின் பாதீடு அமர்வுக்கு சமுகமளிக்காத காரணத்தினாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச)

கொள்வனவு செய்யப்படும்
✔நெல் ✔தானியங்கள்
✔தேங்காய் ✔கொப்பறா.
தொடர்பு:- 077 7722215

வேலைக்கு ஆட்கள் தேவை
✔காசு வசூலிப்பவர் ✔விற்பனைப் பிரதிநிதி
✔உதவியாளர்
தொடர்பு:- 0777722215,0759191111

## பதிவு மீளாய்வு

யாழ்ப்பாணம், ஜன. 2

இருபாலை தெற்கு கமக்காரர்கள் அமைப்பின் அங்கத்தவர்கள் பதிவை மீளாய்வு செய்யும் பணிகள் நாளை நடைபெறவுள்ளன.

நாளை சனிக்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணிவரை இருபாலை தெற்கு பொதுநோக்கு மண்டபத்தில் இந்தச் செயற்பாடுகள் இடம்பெறவுள்ளன. எனவே, அங்கத்தவர்கள் அனைவரும் தமது பதிவை உறுதிப்படுத்துமாறு செயலாளர் நடேசபிள்ளை கஜேந்திரகுமார் அறிவுறுத்தியுள்ளார். (ம)

### மரண அறிவித்தல்



அமரர் திரு. அ . ச பூவேந்திரன்

பிறப்பு : 1935.09.26 இறப்பு: 2025.12.31

யாழ்ப்பாணம் வடமராட்சி வதிரியை பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சரவணமுத்து பூவேந்திரன் அவர்கள் 31/12/2025 புதன்கிழமை கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து மண்டலேஸ்வரி தம்பதியின் மூத்த மகனும், காலஞ்சென்ற தவமணியின் அன்பு கணவரும், காலஞ்சென்ற குமாரசுவாமி இராசம்மா தம்பதியின் (சுன்னாகம்) மூத்த மருமகனும், ராதாகிருஷ்ணன், ராம்குமார், ராதாமோகன், சிவாதவேந்திரன், கௌரி ஆகியோரின் அன்பு தந்தையும், லிண்டா, மாரியட்டா குளோடியா, கௌரி, காயத்ரி, காலஞ்சென்ற ஜெயகாந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சரோயினிதேவியின் அன்புச் சகோதரனும். கிப்தாஸ், மன்தாஸ், மெலிசா, டெவின், சஞ்சீவன், கீதாஞ்சலி, அபிலேஸ், ஜெகதீஸ், கிருஸ்சிகா ஆகியோரின் அன்பு பேரனும், ஈதனின் பூட்டனும் ஆவர்.

அன்னாரின் பூதவுடலானது கல்கிசையில் உள்ள மகிந்த மலர்சாலையில் 03/01/2026 சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மறுநாள் 04/01/2026 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் கிரியைகள் நடைபெற்று கல்கிசை மயானத்திற்கு தகனகிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல் ராம்குமார் 0712632[illegible]
கௌரி 00447056523l.

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 11 . 1952



மறைவு 01 . 01 . 2026

## வயித்தியலிங்கம் பரமேஸ்வரி (கண்ணன் அம்மா பகவதி)


புங்குடுதீவு 12ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், 119/3 முன் ஒழுங்கை பலாலி வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட வயித்தியலிங்கம் பரமேஸ்வரி 01/01/2026 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலம்சென்றவர்களான வயித்தியலிங்கம் - இரத்தினம் தம்பதியினரின் அன்பு மகளும், காலம்சென்றவர்களான தம்பிஐயா மகேந்திரம் தம்பதியரின் அன்பு மருமகளும், வயித்தியலிங்கம் (உரிமையாளர். கண்ணன் லொட்ஜ் பரமேஸ்வராசந்தி) அவர்களின் பாசமிகு அன்பு மனைவியும், சாந்தி (லண்டன்) சதீஸ்குமார் (கனடா) லோகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரவிகரன் (லண்டன்) சசிமாலா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆர்த்திகா, ஆகிஷ் (லண்டன்) அக்சரா, பிரித்திஷா, ஈடிவன் (கனடா) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, பத்தநாதன் காலம்சென்ற பரமலிங்கம் மற்றும் அன்னலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சத்தியரூபதி சச்சிதானந்தம் தர்மாம்பிகை திருச்செல்வம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவர்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் 02/01/2026 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல:119/3 முன் ஒழுங்கை,
திருநெல்வேலி

தகவல்:
கணவர் - 0774465417
மகன் சதீஸ் - 6475456363
மகள் சாந்தி - 44498298279 (லண்டன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். கல்வி வலயத்தின் உடற்கல்விப் பாட ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றிய நவரத்தினம் சிறி முருகதாஸ்காந்தனின் மணிவிழா யாழ். அச்சுவேலி மத்திய கல்லூரியின் மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கல்லூரியின் அதிபர் நா. மகேந்திரராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் 'முருகவர்ணன்' எனும் மணிவிழாச் சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது. (ச-41-66)



## 'கிளீன் ஶ்ரீலங்கா' நடமாடும் சேவை

மன்னார், ஜன. 2

அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் தேசிய நிகழ்ச்சித்திட்டமான கிளீன் ஶ்ரீலங்காத் திட்டத்தின்கீழ் நடமாடும் வேலைத்திட்டம் மன்னார் மாவட்டச் செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

மன்னார் மாவட்டச் செயலர் க. கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக பிரதியமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களாக ஜெகதீஸ்வரன், திலகநாதன், மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன், இராணுவப் பொலிஸ் அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-56,60)

கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் உள்ளூர் உற்பத்தியாளர்களின் மாதாந்த சந்தை கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அனுசரணையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41-100)





வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகின் 2025ஆம் ஆண்டுக்கான ஒளி விழா நிகழ்வு கிளிநொச்சி பூநகரி பள்ளிக்குடா வித்தியாலயத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பூநகரிப் பிரதேச செயலாளர் ே. ஆயகுலன், அருட்தந்தையர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-113)





யாழ். மாவட்ட முச்சக்கரவண்டிச் சேவைச் சங்கம் அண்மையில் ஏற்பட்ட இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட வங்கிக்கணக்குக்கு 5 இலட்சம் ரூபா நிதியை வைப்பிலிட்டுள்ளது.

பற்றுச்சீட்டின் பிரதியை யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபனிடம் கடந்த திங்கட்கிழமை கையளித்தனர். (ச-41-66)



தாமோதரம் பிரதீபன் எழுதிய "அம்பாறைத் தமிழர் வரலாற்றுச் சுவடுகள்" எனும் ஆய்வு நூல், கல்முனை கிறிஸ்தவ இல்லத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்டது. நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், பிரதேச செயலர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள், இலக்கியவாதிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீண்டகால சேவையாளர்களுக்கு யாழ். பல்கலையால் கௌரவம்!

யாழ்ப்பாணம், ஜன. 2

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 25 வருட சேவையைப் பூர்த்திசெய்த விரிவுரையாளர்கள், பணியாளர்கள் நேற்றுக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பணியாளர்கள் மதிப்பளிப்பு வைபவம் நேற்று வியாழக்கிழமை காலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது. பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமை தாங்கினார்.

நிகழ்வில் 2025ஆம் ஆண்டு 25 வருடகால சேவையைப் பூர்த்தி செய்த விரிவுரையாளர்கள், பணியாளர்கள், கடந்த ஆண்டு ஓய்வுபெற்ற விரிவுரையாளர்கள், பணியாளர்கள் என 43 பேர் பதக்கம் அணிவித்தும், சான்றிதழ்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் முன்னாள் துணைவேந்தர்கள், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், நிர்வாக அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-66)

## ஜோன்ஸ்டனுக்கு...

றம் பயணத்தடை விதித்துள்ளது. லங்கா சதொச நிறுவனத்துக்குச் சொந்தமான லொறி உட்பட பல வாகனங்களை தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் மகன் ஜொஹான் பெர்னாண்டோ பொலிஸ் நிதிக் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை கைதுசெய்ய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அவர் தலைமறைவாக இருப்பதைத் தொடர்ந்தே, இந்தப் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது. (அ-ம-44)

## சட்டவிரோதக்...

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட தையிட்டிப் பகுதியில் தனியார் காணியில் அனுமதியின்றி அமைக்கப்பட்ட திஸ்ஸ விகாரையை 'சட்ட விரோதக் கட்டடம்' என அடையாளப்படுத்தும் வகையில் அறிவித்தல் பலகையை மூன்று மொழிகளிலும் காட்சிப்படுத்துவதற்கு பிரதேசசபை அண்மையில் தீர்மானம் எடுத்திருந்தது. இதையடுத்தே, அத்தகைய அறிவித்தல் பலகைகளைக் காட்சிப்படுத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்என்றுபலாலிபொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரியால் வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது:-

தையிட்டி விகாரைக்கு முன்பாக, 'சட்டவிரோதக் கட்டடம்' என அறிவித்தல் பலகை நடப்போவதாக புலனாய்வுப் பிரிவுமூலம் தகவல் கிடைத்துள்ளது. இவ்வாறான அறிவித்தல் பலகையைக் காட்சிப்படுத்துவதன் மூலம் பௌத்தம் மற்றும் இந்து சமயத்துக்கு இடையிலான நல்லிணக்கத்தில் முரண்பாடான நிலைமைகள் ஏற்படும். அத்துடன், இனங்களுக்கு இடையிலான அமைதி சீர்குலையும். ஆதலால், இவ்வாறான அறிவித்தல் பலகைகளை வலிகாமம் வடக்கு பிரதேசசபையாலோ அல்லது வேறு அமைப்புகள் மூலமோ காட்சிப்படுத்தும் நோக்கம் இருப்பின் அதை சட்டரீதியாக மேற்கொள்ளுமாறும், சட்ட ரீதியற்ற முறையில் அவ்வாறு அறிவித்தல் பலகையை நட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கின்றோம் என்றுள்ளது.

இதையடுத்து, தனியார் காணி ஒன்றுக்குள் இது தொடர்பான அறிவித்தல் பலகையைக் காட்சிப்படுத்த பிரதேசசபையினர் தற்போது ஆலோசித்து வருகின்றனர் எனத் தெரியவருகின்றது. (அ-ம-26)

## பிரதேசசபை...

பப்பட்டுள்ளது. மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் பலாலி பொலிஸார் தாக்கல் செய்த வழக்கின் அடிப்படையிலேயே இந்த அழைப்புக் கட்டளை அனுப்பப்பட்டுள்ளது. இதன்படி, எதிர்வரும் ஐந்தாம் திகதி பிரதேசசபை உறுப்பினர்கள் 11 பேரையும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

டிசெம்பர் 21ஆம் திகதி தையிட்டி விகாரைக்கு முன்பாக விகாராதிபதியின் பதவி உயர்வுக்கு எதிராக வலிகாமம் வடக்கு பிரதேசசபை உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட 11 உறுப்பினர்களுக்கே அழைப்புக் கட்டளை அனுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## சஜித்தை...

களை மறந்து, இருவரும் ஓரணியில் ஒன்றிணைவதற்கு அண்மைக்காலமாக பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன. சஜித்தை தலைவராகவும், ரணிலை தலை[illegible] கொண்டு கூட்டணியாகச் செயற்படுவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. இவ்வாறான பின்னணியிலேயே, இருவரும் பரஸ்பரம் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், அண்மைக்கால அரசியற்போக்குத் தொடர்பிலும் இருவரும் கவனம் செலுத்தினார்கள் என்றும் அவர்களுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (அ-ம-44)

## மாகாணசபைத்...

ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய பிரதான எதிர்க்கட்சிகளின் விசேட ஊடக சந்திப்புகள் நேற்று இடம்பெற்றன. இதன்போதே, ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் தேர்தலுக்கு அச்சப்படாமல், மாகாணத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்று அவை வலியுறுத்தியுள்ளன.

'மாகாணத் தேர்தல் நடத்தப்படும் என்ற வாக்குறுதியை ஜனாதிபதி அநுரகுமார பல்வேறு சந்தர்ப்பங்களில் நாட்டு மக்களுக்கு வழங்கியுள்ளார். ஆனால், தேர்தலை நடத்தாமல் காரணங்களைத் தெரிவித்து தற்போது இழுத்தடித்து வருகின்றனர்' என்றும் எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இதேவேளை, தேர்தலை நடத்துவதற்குத் தயார் என்று அரசாங்கம் ஏற்கனவே அறிவித்துள்ளது. ஆயினும், தேர்தல் முறைமையைத் தீர்மானிப்பதில் தற்போது இழுபறிகள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## பாடசாலைகளின்...

பட்டுள்ளது. எதிர்வரும் கல்வியாண்டு முதல் பாடசாலைகளின் நேரத்தை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதற்கு ஆசிரிய சங்கங்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தன. இவ்வாறான நிலையிலேயே, நிலைமைகள் சீராகும் வரை பாடசாலைகளின் நேரத்தை அதிகரிக்காமல் இருப்பதற்கு தற்போது முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

5ஆம் ஆண்டு தொடக்கம் 13ஆம் ஆண்டுவரையான மாணவர்களுக்கு காலை 7.30 மணியில் இருந்து நண்பகல் 1.30 மணிவரை பாடசாலை நேரம் மாற்றமின்றித் தொடரும்.

6ஆம் தரத்தில் இருந்து 13ஆம் தரம் வரையான மாணவர்களுக்கு ஒரு நாளுக்கான பாடங்களின் எண்ணிக்கை 7 ஆகும். பாடங்களின் நேரம் 45 நிமிடங்களாகும்.

கல்வி மறுசீரமைப்புச் செயற்பாட்டின் கீழ், 6ஆம் தரத்துக்கான நடவடிக்கைகள் ஜனவரி மாதம் 21ஆம் திகதி ஆரம்பமாகும்.

தரம் ஒன்றுக்கு மாணவர்களை அறிமுகப்படுத்தும் செயற்பாடு ஜனவரி 5ஆம் திகதி ஆரம்பமாகும். கல்வி நடவடிக்கைகள் ஜனவரி மாதம் 29ஆம் திகதி ஆரம்பமாகும் - என்றுள்ளது. (அ-ம)

## பிரதேச...

என்பவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மதுபோதையில் வீதியில் நின்று கூச்சலிட்டுக் கொண்டிருந்த நபரொருவர் திடீரென கத்தியால் குத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார் என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

படுகாயமடைந்த நபர் உடனடியாக மீட்கப்பட்டு மருதங்கேணி மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட நிலையில், அவர் முன்னதாகவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். குற்றப்பின்னணி தொடர்பில் உறுதியான தகவல்கள் தெரியவராத நிலையில், மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-100-26-66)

## டக்ளஸைச்...

அநுர தலைமையிலான அரசாங்கத்தால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த விடயம் தொடர்பில், பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலர் சாகர காரியவசம் கருத்துத் தெரிவித்துள்ளார். இதன்போதே, பிள்ளையான், டக்ளஸ் இருவரும் கைதானமைக்கு அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் நிலவிய 30 வருடகால போரை முடிவுக்கு கொண்டுவந்தில் பிள்ளையானுக்கும் டக்ளஸுக்கும் பெரும் பங்குள்ளது. புலிகளின் அச்சுறுத்தலையும் கருத்திற்கொள்ளாது அவர்கள் இருவரும் செயற்பட்டனர். அப்படிப்பட்ட தலைவர்கள் இருவரும் தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை கவலைக்குரிய விடயமாகும் என்றும் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் தேசங்களில் உள்ள புலிகளைத் திருப்திப்படுத்தவே டக்ளஸையும், பிள்ளையானையும் சிறையில் அடைத்துள்ளனர். பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடிய அவர்கள் இருவரையும் விடுவிக்க வேண்டியது அவசியம் என்று பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலர் சாகர காரியவசம் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-ம-44)

## திஸ்ஸ...

நிலையில், தமிழ்க் கட்சிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் என அனைவரையும் கலந்து கொண்டு ஆதரவு வழங்குமாறு போராட்ட ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (அ-ம-26-66)

## மகனைத்...

நாகேந்திரம் (வயது-67) என்ற வயோதிபப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நாகேந்திரம் தயாளன் என்ற தனது மகனை நீண்டகாலமாகத் தேடிவந்த அந்தத் தாய், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரி நடத்தப்பட்ட பல்வேறு போராட்டங்களிலும் பங்கெடுத்திருந்தார். அண்மைக்காலமாக சுகவீனமுற்று ஓய்வில் இருந்துவந்த நிலையிலேயே, தனது மகனைக் காணாமல் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

காணாமற்போன மகனைத் தேடியலைந்த தந்தையொருவர் சில தினங்களுக்கு முன்னர் உயிரிழந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## எரிவாயு...

5 கிலோகிராம் லாப்ஸ் எரிவாயுவின் 65 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, புதிய விலையாக ஆயிரத்து 710 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மஹிந்தவுக்கு உள்ள செல்வாக்கு அவர் மகன் நாமலுக்கு இல்லை!

## முன்னாள் அமைச்சர் டிலான் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.2
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு உள்ள செல்வாக்கு அவரது மகன் நாமல் ராஜபக்சவுக்கு இல்லை என்று முன்னாள் அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
மஹிந்த ராஜபக்சவுக்கு மக்கள் மத்தியில் உள்ள செல்வாக்கு அவ்வாறே உள்ளது. ஆனால் அவருக்கு உள்ள செல்வாக்கு அவரின் மகன் நாமல் ராஜபக்சவுக்கு இல்லை. ஏனைய அரசியல்வாதிகளுக்கும் இல்லை. நாமல் ராஜபக்ச வேகமாக வளர்ந்துவரும் அரசியல்வாதியாக இருந்தாலும் தனித்துச்சென்று சாதிக்கமுடியாது. அடுத்த தேர்தலில் எதிரணிகள் ஒன்றுபடாவிட்டால் அடுத்த தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தியே வெற்றிபெறும். அடுத்த ஜனாதிபதி என்ற சிந்தனைக்கு அப்பால் அடுத்து அமையும் அரசாங்கத்தின் தலைவர் என்ற எண்ணத்துடன் நாமல் செயற்பட்டால் நல்லது. அதேவேளை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றம் வருவது நாட்டுக்கு நல்லது. அவரது அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்-என்றார். (எ-44)



### இந்த ஆண்டிலாவது

# அடக்குமுறைகள் அகலட்டும்!

## செல்வம் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.2
அரசியல் ரீதியான அடக்குமுறைகளைச் சந்தித்துள்ள தமிழ் மக்களுக்கு பிறந்துள்ள புதிய ஆண்டு நன்மையைத் தரக்கூடிய ஆண்டாக அமைய வேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் மேலும் குறிப்பிட்டதாவது-
பிறந்துள்ள புதிய வருடத்தில் எமது மக்கள் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியான துன்பங்கள் இன்றி மகிழ்ச்சியாக வாழவேண்டும்.
எமது மக்கள் கடந்த ஆண்டில் பல்வேறு பிரச்சினைகளுக்கும் இடர்களுக்கும் முகங்கொடுத்துள்ளனர். பொருளாதார வீழ்ச்சி, இயற்கை அனர்த்தம் உள்ளிட்ட பிரச்சினைகளைச் சந்தித்து தற்போது மீண்டு வருகின்றனர். எமது மக்கள் அனுபவித்துவந்த துன்பங்கள் அகன்று சந்தோஷமான வாழ்க்கையைத் தொடர்வதற்கான ஆண்டாக இந்த ஆண்டு அமையவேண்டும் - என்றார். (ச-56)

# வலி.வடக்குப் பிரதேசசபையில் புத்தாண்டு சத்தியப்பிரமாணம்

யாழ்ப்பாணம்,ஜன.2
வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் 2026ஆம் ஆண்டுக்கான சத்தியப்பிரமாண நிகழ்வு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. தொடர்ந்து புதிய வருடத்தில் வலிகாமம் வடக்கின் அபிவிருத்திச் செயற்பாடுகளை மேலும் துரிதகதியில் மேற்கொள்வது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதுடன் இயற்கைப் பேரிடர் காலப்பகுதியில் வலிகாமம் வடக்கில் மக்களுக்காகக் களப்பணிகளாற்றிய பிரதேசசபை ஊழியர்கள் கௌரவிக்கப்பட்டனர். (க-66)

# அரசியல் 'டீல்' மூலமே பட்ஜெட் நிறைவேற்றம்

## கொழும்பு மாநகரசபையின் ஐ.ம.சக்தி உறுப்பினர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 2
அரசியல் 'டீல்' மூலமே கொழும்பு மாநகரசபையின் வரவு- செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் மாநகரசபை உறுப்பினர் ரிசா சாருக் குற்றஞ்சாட்டியுள்ளார்.
கொழும்பு மாநகரசபையின் வரவு -செலவுத் திட்டம் நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட் டது. அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே ரிசா சாருக் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
வரவு-செலவுத் திட்டம் தொடர்பில் வாக்கெடுப்பு நடந்தது. எமது கூட்டு எதிரணியில் உள்ள உறுப்பினர் ஒருவரைப் பொலிஸார் அழைத்துச்சென்றனர். அவர் கடைசி நேரத்திலேயே வாக்களிக்க வந்தார்.
இரு உறுப்பினர்களைக் காணவில்லை. தொலைபேசியும் செயலிழந்துள்ளது. கூட்டு எதிரணியில் இருந்த உறுப்பினர் ஒருவர் அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களித்தார். எனவே, இங்கு என்ன நடந்துள்ளது என்பதை ஊடகவியலாளர்கள் நிச்சயம் அறிவார்கள். வரவு-செலவுத் திட்டம் அன்று தோற்கடிக்கப்பட்டபோது மேயர் மனசாட்சி குறித்து கருத்து வெளியிட்டார். எனவே, ஆளுங்கட்சிக்கு இப்போது எவ்வாறு பெரும்பான்மை கிடைத்தது என்பது பற்றி அவர் அவரது மனசாட்சியிடம் கேட்கவேண்டும். கூட்டு எதிரணிக்கு பெரும்பான்மைப்பலம் உள்ளது. மக்களுக்காக நாம் முன்னிலையாவோம்-என்றார். (எ-44)

# மரண அறிவித்தல்

தோற்றம்
13 . 09 . 1957



மறைவு
31 . 12 . 2025

## சறோஜினிதேவி குணரத்தினம்

காங்கேசந்துறையைப் பிறப்பிடமாகவும், மீசாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சறோஜினிதேவி குணரத்தினம் அவர்கள் 31.12.2025 புதன் கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் சின்னத்தம்பி குணரத்தினம் (உத்தரவு பெற்ற கட்டிட வரைபட வரைஞர்) அவர்களின் பாசமுள்ள மனைவியும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - றோசம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தனபாக்கியம் தம்பதியரின் மருமகளும், சர்மினி, டேனுஷா ஆகியோரின் பாசமிகு தாயாரும், நவரூபனின் பாசமிகு மாமியாரும், அஜய், ஆதிரன், சாயிராம் ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியாரும், காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் தவமணி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற இரத்தினசோதி மற்றும் இந்திரசோதி, தேவிகாராணி, காலஞ்சென்ற ராஜினிதேவி மற்றும் ஆனந்தசோதி, காலஞ்சென்றவர்களான கமலாதேவி, கிருபாதேவி மற்றும் இந்திரராணி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2026) வெள்ளிக்கிழமை அவரது மீசாலை மேற்கு இல்லத்தில் காலை 08.30 மணிக்கு ஆரம்பித்து பூதவுடல் மு.ப 11.00 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
கணவர், மகள்மார், மருமகன்

(CR 46321) E

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 [illegible] news@uthayan.com [illegible]advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தி[illegible] 361 [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.01.2026இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org